

பாடலாசிரியர், கவிஞர் பூவை செங்குட்டுவன், சென்னையில் மறைவெய்தியதையொட்டி, சென்னை பெரம்பூர் ரமணா நகரில் உள்ள அவரது இல்லத்திற்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். வடசென்னை மாவட்ட முன்னாள் செயலாளர் தா.இளைய அருணா உடன் உள்ளார்.



விழுப்புரம் மத்திய மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் அவர்களின் தந்தை இராஜாமணி அவர்களின் மறைவையொட்டி கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கழக கொள்கை பரப்பு செயலாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் மறைந்த இராஜாமணி அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, நகரச் செயலாளர் இரா.சக்கரை உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### முத்திரைப் பதிக்கும் முத்தான திட்டங்களை தமிழகத்திற்கு தந்து

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப். 8–

முத்திரை பதிக்கும் முத்தான திட்டங்களை தமிழகத்திற்கு தந்து தேசத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று தினகரன் நாளேடு நேற்றைய தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து தினகரன் நாளேட்டின் தலையங்கம் வருமாறு:

முத்திரை பதிக்கும் முத்தான திட்டங்களை தமிழ் நிலத்திற்கு தந்து ஒட்டுமொத்த

தேசத்தின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். இதே போல், தொலை நோக்கு பார்வையோடு அயல்நாடுகளுக்கு பயணித்து, தொழில் முதலீடுகளை குவிக்கும் அவரது செயல்பாடுகளுக்கும் பாராட்டுகள் குவிந்து வருகி றது. தமிழகத்தின் பொருளாதாரத்தை வரும் 2030ம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டால ராக மாற்றவேண்டும் என்ற இலக்கோடு, அவரது பயணம் தொடர்ந்து வருகிறது. இந்த வகையில், தற்போது இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு சென்று வியப்பூட்டும் தொழில் முதலீட்டு ஒப்பந்தங்களை பெற்றுள்ளார் நமது முதல்வர்.


தினகரன்
செப்டம்பர் 7, 2025 ஞாயிற்றுக்கிழமை
திராவிடத்தின் தனித்துவம்
முத்திரை பதிக்கும் முத்தான திட்டங்களை தமிழ் நிலத்திற்கு தந்து ஒட்டு மொத்த தேசத்தின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். இதே போல், தொலை நோக்கு பார்வையோடு அயல்நாடுகளுக்கு பயணித்து, தொழில் முதலீடுகளை குவிக்கும் அவரது செயல்பாடுகளுக்கும் பாராட்டுகள் குவிந்து வருகிறது. தமிழகத்தின் பொருளாதாரத்தை வரும் 2030ம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக மாற்றவேண்டும் என்ற இலக்கோடு, அவரது பயணம் தொடர்ந்து வருகிறது. இந்த வகையில், தற்போது இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு சென்று வியப்பூட்டும் தொழில் முதலீட்டு ஒப்பந்தங்களை பெற்றுள்ளார் நமது முதல்வர்.

மாநிலத்தின் மேம்பாட்டுக்காக அயல்நாடுகளுக்கு பயணப்படும் போதெல்லாம் தமிழர் பாரம்பரிய தனித்துவத்தையும் உணர்த்தி வருகிறார். தற்போது உலகப்பிர சித்தி பெற்ற இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத் தில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்துள்ளார். இதன்மூலம் பெரியார் பெருமையோடு தமிழ்நிலப் பெருமையும் உலகமயமாகி உள்ளது என்பதே நிதர்சனம். இத்தகு பெருமைக்கு மத்தியில், அவர் ஆற்றிய உரையும் வரலாற்று சிறப்புமிக்கது என்கின்றனர் சமூக மேம்பாட்டு ஆர்வலர்கள்.

நூற்றாண்டுகளாக உலகின் சிறந்த அறிவாளிகளை உருவாக்கி தந்துள்ளது ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம். இந்த பல்கலைக்கழகத்தில் பேசுவதை நான் பெருமையாக கருதுகிறேன். நான் இங்கு தமிழக முதல்வர், தெற்காசியாவில் அரசியலை புரட்டிப்போட்ட தி.மு.கழகத்தின் தலைவர் என்ற முறையில் மட்டும் வரவில்லை. பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் பேரன் என்ற கம்பீரத்துடன் உங்கள் முன்பு நிற்கிறேன். அவரது படத்தை ஆகஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் திறந்து வைப்பதை எனது வாழ்நாள் பெருமையாக கருதுகிறேன். பகுத்தறிவு பட்டொளி உலகம் முழுவதும் பரவி வருகிறது என்பதன் அடையாளம்தான் இந்த படத்திறப்பு விழா.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் அறிவின் அடையாளமாக மட்டுமன்றி, உரிமையின் அடையாளமாகவும் திகழ்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் சமத்துவ பெரியாரின் படம் திறக்கப்பட்டுள்ளது. சுயமரியாதை இயக்கத்தின் தொடர்ச்சியாக இயங்கும் தி.மு. கழகத்தின் தலைவர் பொறுப்பில் இருக்கும் எனக்கு, இதைவிட பெருமையாக வேறு எதுவும் இருக்க முடியாது. தந்தை பெரியாரின் கொள்கை வாரிசு என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

ஒடுக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து, இங்கு வந்து நல்ல நிலையில் முன்னேறிய ஏராளமான மக்களை இங்கு காண முடிகிறது. அவர்களை போல் தமிழகமும் நல்ல முறையில் முன்னேறி வருகிறது. கல்வி, பொருளாதாரம், தொழில் வளர்ச்சி, வாழ்க்கைத்தரம், உட்கட்டமைப்பு வசதியில் முன்னேறி இருக்கிறோம். உலகத்தின் சாதனை உற்பத்தியாக மட்டுமே மாறி இருக்கிறது. அதேநேரத்தில் பட்டினிச்சாவு இல்லாத மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இந்த வகையில் மற்ற மாநிலங்கள் வியந்து பார்க்கும் மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது. இது தான் திராவிட இயக்கத்தின் சாதனை என்ற முதல்வரின் உரை, வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று, அதேநேரத்தில் ”ஒரு இனத்திற்கே சுயமரியாதை உணர்வூட்டி தலைநிமிர வைத்த பெரும் ஆசான் தந்தை பெரியார். அவர் இந்த சமூகத்தில் விதைத்தது நாத்திகம் இல்லை, பகுத்தறிவு, அந்த பகுத்தறிவு மூலம் உருவாகும் சுயமரியாதை உணர்ச்சி தான், உலக மக்களையே ஒரு குடும்ப சகோதரர்களாக மாற்றும், என்பதையும் முதல்வர் அழுத்தமாக பதிவு செய்திருப்பது திராவிடத்தின் தனித்துவம்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முத்திரை பதித்துவரும் முதல்வரை முகமலர அகமலர வரவேற்போமே!



தமிழ்நாடு தலைநிமிர்ந்து நின்றிட
தகுதியுடன் முதலிடத்தை வென்றிட
நமதருமை முதல்வர்பல நாடுகட்கு
நற்பயணம் மேற்கொண்டு திரும்புகின்றார்.

செல்லுகிற நாடுகள் அனைத்திலுமே
சிவப்புக்கம்பள வரவேற்பைப் பெறுகின்றார் – பேர்
சொல்லுகிற வகையிலே தமிழன்பர்கள்
சுற்றுமுடன் வருகைதந்து வாழ்த்துகின்றனர்!

செர்மனி இங்கிலாந்து நாடுகளில்
செழிப்பாக பதினைந்தாயிரம் கோடிக்குமேலே
புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டதெலாம்
ஒரு ட்ரில்லியன் இலக்கிற்கு அடித்தளங்கள்...!

தமிழ்நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாய்
தரணிபோற்றும் வகையிலே திகழ்ந்திடவே
இமியளவும் சோர்வின்றி இயந்திரமாக
இயங்கியே உழைக்கின்றார் நம்தளபதி...!

முதலீடுகளைப் பெறுவதில் நம்முதல்வரின்
முயற்சிகள் அனைத்துமே வெல்லட்டும்...!
இதுபோல தமிழ்நாடு இதற்குமுன்பு
இருந்ததிலை என்பதைஊர் சொல்லட்டும்!

இந்தியாவில் தொழில்களைத் தொடங்குதற்கு
ஏற்றஇடம்... உகந்தஇடம் தமிழ்நாடெனும்
சிந்தனையை உலகளவில் விதைத்துவிட்டு
திரும்புகிற முதல்வருக்கு கோடி வணக்கம்!

‘ஆக்ஸ்போர்டில்’ பெரியார்படம் திறந்துவைத்ததும்
அம்பேத்கர் தங்கியிருந்த இடம்சென்றதும்
பூக்காடாய் மணக்கிறது.. இப்பயணத்தில்
புகழோங்கு மகுடமாய்த் திகழ்கின்றது...

வாயாலே வடைசுடுவோர் மத்தியிலே
வாகைசூடி செயல்வீரராய் வலம்வருகிற
தாயுமானத் தளபதியை மலர்தூவியே
தலைநிமிர்ந்து பெருமையுடன் வரவேற்போமே!



கவிஞர்
**இரவிபாரதி**

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை! குன்றத்தூர் வடக்கு ஒன்றிய

# மாவட்டப் பிரதிநிதி எஸ்.சந்தானம்-கலாவதி இல்லத் திருமணம்!

## டி.ஆர்.பாலு எம்.பி.– ஆர்.எஸ்.பாரதி – கழகத்தினர் வாழ்த்துரை!

சென்னை, செப். 8-

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி எஸ். சந்தானம் - பரணி புத்தூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் கலாவதி சந்தானம் ஆகியோரின் புதல்வர் எஸ்.ஜெயகுமார் (எ) பிரேம் குமாருக்கும், மாங்காடு கே.பாபு - செல்வி ஆகியோரின் புதல்வி பி.ஷாலினிக்கும் திருமண விழா 11.09.2025 வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் குன்றத்தூர் மெயின் ரோடு, கோவூரில் உள்ள தனலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



இம்மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை வகிக்கிறார்.

இம்மணவிழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., ஆர்.எஸ். பாரதி, மீ.அ.வைதியலிங்கம், ஆ. கிருஷ்ணசாமி எம். எல்.ஏ., படப்பை ஆ. மனோகரன், ஏ. வந்தேமாதரம், சரஸ்வதி மனோகரன், உமா மகேஸ்வரி வந்தே மாதரம், இ. மணி, கோ. சத்தியமூர்த்தி, எஸ். ஜபருல்லா, கே.எத்திராஜ், எம். ஆர். சீனிவாசன், திரைப்பட நடிகர் ரமேஷ் கண்ணா ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இதில் து. சுந்தர், பொன். ஜீவா, கே. வசீகரன், பூங்கொடி அரசு, எஸ். ராஜா தேசிங்கு, பா. ராஜேந்திரன், எஸ்.கே.துளசிங்கம், த.க. பாஸ்கரன், டி.எஸ்.எம். ஜெயகரன், டி.ஆர். சாரதி பெரிய நாயகம், ப. குமரவேல், தா. அன்பழகன், தமிழசி சுரேஷ், சுலைமான் சையத், சு. ஜனார்த்தனன், ரா. நவீன்ராஜ், வெ.கவிபாரதி, கு. பிரவீன்குமார், கு. தமிழ்வாணன், செ. இமான் (எ) கௌதம், செ. அரிபிரகாஷ், ப. சிலம்பரசன், ர.பிரபு, வெ. வசந்தகுமார், ரா. அரிபாபு, து.நாராயணன், மகேஸ்வரி, பா. காமாட்சி, ஜோஸ்பின் கிளாரா, தி. சுகுணா, ஜெ. ஜெயஸ்ரீ, எம். ஆனந்தி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இம்மணவிழாவிற்கு வருகை தருவோரை கௌரி தாமோதரன், சி. பாண்டியன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

### தாராபுரம் எஸ்.வி.செந்தில்குமார் ஏற்பாட்டில்

# நஞ்சியம்பாளையம் ஊராட்சியில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில்!

திருப்பூர், செப். 8 -

கழகத் தலைவர், இந்தியாவின் நம்பர் 1 முதல்வராக விளங்கும் திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையே தேவை என்பதை உணர்ந்து திருப்பூர் மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக்குழு முன்னாள் பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார் ஏற்பாட்டில் தாராபுரம் புறவழிச் சாலையில் அமைந்துள்ள குமரகுரு ஹோட்டல் அரங்கில் 06.09.2025 சனிக்கிழமை இன்று மாலை 4.00 மணியளவில் திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் மேற்கு ஒன்றியம், நஞ்சியம் பாளையம் ஊராட்சி அ.தி.மு.க. கிளைக் கழகச் செயலாளர், கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் கோ.ராஜன், அமராவதி அணை பாசன வாய்க்கால் சங்க முன்னாள் தலைவர் என்.பழனிச்சாமி, ஊராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர் நாச்சிமுத்து, தெக்காலூர் அ.தி.மு.க கழக கிளைச் செயலாளர் மற்றும் முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் புஷ்பா, சின்னச்சாமி, கிளை செயலாளர் ஆர்.ஆறுமுகம் ஆகியோர் தலைமையில் ப.முருகேசன், மு.சத்தி, ப.கணேசன், ஆர். சரஸ்வதி, ஆர்.ஜோதிபாசு, ம.பாக்கியலட்சுமி, நா.கணேசன், க.பத்மாவதி, க.கார்த்திகேயன், கா.கலைவாணி, க.ஈஸ்வரமூர்த்தி, ஈ.செல்வி, ப.முருகேசன், மு.கவின், மு.கலாவதி, மு.கார்த்தி, சு.வேலுச்சாமி, வே.ஈஸ்வரி உள்பட 38 நபர்களும், தெக்காலூர் கிளையில் ரா.பழனிச்சாமி, ப. அண்ணாத்துரை, அ.நவினா, வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், சு.நளினி, ரா.திருமூர்த்தி, தி.துளசி, வ.முருகன், மு.கருப்பத்தாள், செ.குணசேகரன், செ.சித்ரா, செ.லோகநாதன், லோ.லதா, வ.வீராச்சாமி, வ.சிவகாமி, வீ. மோகன்குமார், ப. மாகாளி, ப.சிவக்குமார் உள்பட 112 நபர்களும், தெக்காலூர் ஏ.டி.குடி யிருப்பு பகுதியில் ஆ.வீரம்மாள், ஆ.பூபதி, சு.பொன்னுச்சாமி, பொ.லட்சுமி, ரா.குப்புச்சாமி, கு.சித்ரா, கு.சஞ்சய்க்குமார், தொ. மாயவன், மா.ராமாத்தாள், மா.முருகன், மு.சுப்பு லட்சுமி, சு.நட்ராஜ், பிரகாஷ், பி.நதியா, ம.ஜெயந்தி, maசு. லட்சுமி, மு.சரோனி, மு.மணிராஜ், ம.சந்தியா, ரா.பழனி யம்மாள், சு.பழனிச்சாமி, சா.சர்க்கரை யம்மாள், தி.கோபால், கோ.பழனி யம்மாள், சி.கனகராஜ், க.தெய்வானை உள்பட 60 நபர்களும், நஞ்சியம்பாளையம் ஏ.டி. குடியிருப்பு பகுதியில் ரா.பழனிச்சாமி, ப.சித்ரா, ப.அண்ணாத்துரை, அ. நவினா, வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், வ.ஆறுச்சாமி, ஆ.சிவகாமி, தி.சுரேஷ், சு.நளினி, ரா.திருமூர்த்தி, தி.துளசி, வ.முருகன், மு.கருப்பாத்தாள், செ.குணசேகரன், செ.சித்ரா, செ. லோகநாதன், லோ.லதா, வ.வீராச்சாமி, வ.சிவகாமி, வீ. மோகன்குமார், ப. மாகாளி, ப.சிவக்குமார் உள்பட 106 நபர்கள் என மொத்தம் 316 பேர் தங்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் தாய் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவரையும் நம் நெஞ்சமெல்லாம் கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பிலும், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், இளம் தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சார்பிலும், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பிலும், தாராபுரம் ஒன்றியக் கழகத்தின் சார்பிலும், கிளைக் கழகத்தின் சார்பிலும் வாழ்த்தி வரவேற்று அனைவருக்கும் கைத்தறி துண்டு அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் 05.09.2025 மாலை 6.30 மணியளவில் மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார். மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, முன்னிலை வகித்தார். மாவட்ட இலக்கிய அணி தலைவர், மாவட்ட துணை தலைவர் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர் மற்றும் புதிய பகுதி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். அனைவரையும் வரவேற்கும் விதமாக கருப்பு சிவப்பு துண்டு அணிவிக்கப்பட்டு, கலைஞர் பண்பாட்டு புரட்சி நூல் வழங்கப்பட்டது.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மணலி ஊராட்சியின் முன்னாள் தலைவர் டி.சந்தானகிருஷ்ணன் மகனும் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞர் அணியை சேர்ந்த டி.சுரேஷ் தந்தையும் மணலி கிராம முன்னேற்ற சங்கத்தின் கௌரவ தலைவர் கழகத்தின் தீரா பற்றாளர் எஸ்.தென்னரசு இயற்கை எய்தினார். அவரது திருஉடலுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர் கேபிள் த.வேல் கணேசன், சின்ன மாத்தூர் மணிகண்டன், மணலி எஸ்.ஸ்டாலின், எம்.சுரேஷ், கு.சுரேஷ், நா.ப.புகழரசு, விக்னேஷ், ஆர்.சரண், ந.ஜோதிபாஸ், எஸ்.சர்மா, பாஸ்கர், ஏ.கார்த்திக், மற்றும் கழக உடன்பிறப்புகள், இளைஞர் அணி தோழர்கள் திரளாக கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.